A Cenviro Company

# காற்றுத் தூய்மைக்கேடு கண்காணிப்பு நடவடிக்கை: 'ஜாஸ்' மேற்கொண்டது

**கோலாலம்பூர், மார்ச் 2-**
சிரம்பான், புக்கிட் நனாஸ் நச்சுக் கழிவு கிடங்கு ஒன்று தீப்பற்றியதைத் தொடர்ந்து சுற்றுச் சூழல் இலாகா 3 இடங்களில் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டது.

இந்த கண்காணிப்பு நடவடிக்கையில் காற்றுத் தூய்மைக் கேட்டு அளவைக் கருவியைப் பயன்படுத்தி பண்டார் ஸ்ரீ செண்டாயான், சிரம்பான் 2 ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியான சோதனை மேற்கொண்டதன் வழி காற்றின் தரம் நன்றாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

சம்பவம் நிகழ்ந்த இடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணி வரை மேற்கொண்ட கண்காணிப்பில் 4 கிடங்குகளில் 3 முற்றாக தீயில் அழிந்தன. இதில் அங்கு ஏற்பட்ட தீயை தீயணைப்பு மீட்புப் படையினர் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டதாக அறிக்கை ஒன்றில் அந்த இலாகா குறிப்பிட்டது.

இச்சம்பவம் நிகழ்ந்ததற்கான காரணம் மற்றும் இதில் என்னென்ன வகையான கழிவுப் பொருட்கள் எரிக்கப்படுகின்றன என்பதை விளக்கும் அறிக்கை ஒன்றை பெறுவதற்காக இலாகா, சுற்றுச் சூழல் தர நிறுவனம், கழிவுப் பொருட்களை அகற்றும் நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையே கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

அந்த வகையில் 'அஸ்மா' எனப்படும் மலேசிய சுற்றுச்சூழல் நிறுவனத்துடன் இணைந்து இன்னும் கூடுதலாக 3 காற்றுத் தர கண்காணிப்பு மையங்களை அமைக்க இருப்பதாக அவ்விலாகா மேலும் கூறியது.

Media : Tamil Nesan
Date : 2 March 2015